# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2021.11.19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தம்)

**(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்**
**சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### *சட்டப்பயன்பற்றிய கூற்று*

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் விரிவுப் பெயரை மாற்றீடுசெய்வதுடன் இத்திருத்தத்தின் சட்டப்பயனானது முதன்மைச் சடடவாக்கத்தின் நோக்கெல்லையை விசாலிப்பதாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, காட்டுத் தாவர, விலங்கினங்களின் ஆபத்துக்குட்பட்ட இனங்களிலான சர்வதேச வியாபாரத்தின்மீதான சமவாயத்துக்கு* (CITES) *பயன்கொடுப்பதற்கென ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அமைச்சருக்குத் தத்துவமளிப்பதாகும்.*

## தாவர, விலங்கினப் பாதுகாப்பு
## (திருத்தம்)

ச.வ.- ஓ. 13/2017

### (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2021ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

469 ஆம் அத்தியாயத்துக் கான விரிவுப் பெயரை மாற்றீடு செய்தல்

**2**. (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்துக்கான விரிவுப்பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப்பெயர் இடப்படுகின்றது:-

> “இலங்கையிலுள்ள தாவரங்களையும் விலங்கினங்களையும் மற்றும் அவற்றின் வாழிடங்களையும் பாதுகாப்பதற்காகவும் பேணுவதற்காகவும்; அத்தகைய தாவரங்களினதும் விலங்கினங்களினதும் மற்றும் அவற்றின் வாழிடங்களினதும் வர்த்தகஞ்சார் அத்துடன் வேறு துர்ப்பிரயோகத்தைத் தடுப்பதற்காகவும்; இலங்கையின் உயிரிய வேற்றுமையைப் பேணுவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும்; காட்டுத் தாவர, விலங்கினங்களின் ஆபத்துக்குட்பட்ட இனங்களிலான சர்வதேச வியாபாரத்தின் மீதான சமவாயத்துக்கு (CITES) பயன் கொடுப்பதற்கு அத்தகைய வழிமுறைகளை எடுப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு கட்டளைச்சட்டம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ஊஅ) அமைச்சரவையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துக்கமைய, காட்டுத் தாவர, விலங்கினங்களின் ஆபத்துக்குட்பட்ட இனங்களிலான சர்வதேச வியாபாரத்தின்மீதான சமவாயத்தின் (CITES) ஏற்பாடுகளை வலுவுறுத்துவதற்கு அவசியமான எல்லாக் கருமங்களும்;

(ஊஆ) காட்டுத் தாவர, விலங்கினங்களின் ஆபத்துக்குட்பட்ட இனங்களிலான சர்வதேச வியாபாரத்தின்மீதான சமவாயத்தின்கீழ் (CITES) வழங்கப்படவுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின்மீது நிமித்துக் குழுக்களின் விதப்புரைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக அவற்றை நியமித்தல்;".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.